2009 ஜூலை 3]

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திற்கு ஒன்று என்பதை நாமாகப் பகிர்ந்துகொள்ளலாம். அந்த அடிப்படையில், உங்கள் மாவட்டத்திலே எந்தப் பகுதியில் அமைப்பது என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ளலாம். மினி விளையாட்டரங்கம் அமைப்பதிலே, உங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே தரங்கம்பாடியில் ஒரு மினி விளையாட்டரங்கம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே உங்களுடைய மாவட்டத்தில் உள்ள திட்டச்சேரியில் கடற்கரை கையுந்துப் பந்து மையத்தை கிராம விளையாட்டுப் பயிற்சி மையமாக அறிவித்து, அதை நானே வந்து தொடங்கிவைத்ததையும் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

87—

பாலம்

***10136—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூரில் பாலாற்றின் குறுக்கே உடைந்துபோன பழைய பாலத்திற்குப் பதிலாகப் புதிய பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூரில் பாலாற்றின் குறுக்கே உடைந்துபோன பழைய பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் கட்டும் பணிக்கு மைய அரசின் மாநிலங்களை இணைக்கும் சாலைத் திட்டத்தின்கீழ் ரூ.16.01 கோடி மதிப்பில் மைய அரசு ஒப்புதல் பெற்று, 28-2-2008 முதல் பணிகள் தொடங்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன. மார்ச் 2010-க்குள் பணிகளை முடிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

[2009 ஜூலை 3

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Inter-State Road என்கின்ற வகையில், இதற்காக 16 கோடி ரூபாய் வழங்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டிருந்தாலும்கூட, பணிகள் மிகவும் மெத்தனமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எங்களுக்கு அங்கே ஒரேயொரு பாலம்தான் இருக்கிறது. அந்தப் பாலத்தில் சில நேரங்களில் ஏதாவது விபத்து ஏற்பட்டுவிட்டால், காட்பாடி ஒரு தீவுபோல தனித்துவிடப்படுகிறது. 2010-க்குள் பணிகள் முடிவடையும் என்று கூறுகிறார்கள். கூடிய விரைவிலே பணிகளை முடிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது இருக்கின்ற ஒரு பாலமும் பழுதடைந்து ஆட்டம் காண்கிறது. காங்கேயநல்லூரிலிருந்து சத்துவாச்சாரி பகுதிக்கு பாலாற்றின் குறுக்கே 19.25 கோடி ரூபாய் செலவில் பாலம் கட்டுவதற்காக ஒரு திட்டத்தைத் தீட்டி, 7 ஆண்டுகளுக்கு முன்னாலே முன்மொழிவுகள் அனுப்பப்பட்டன. எனவே, அந்தப் பாலத்தை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பணிகள் வேகமாக நடைபெற வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். எனவே, பணிகள் வேகமாக நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு பாலம் ஆட்டம் கண்டுகொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். அது, 1975 ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதல்வர், தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கும்பொழுது கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அப்படி ஏதாவது பழுது ஏற்பட்டிருக்குமானால், அதைப் பழுதுபார்க்க நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோல, இன்னொரு நேர்வில் முன்மொழிவு அனுப்பப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றி என்னிடத்திலே விவரம் இல்லை. இருப்பினும், அதுபற்றி நிச்சயமாகப் பரிசீலனை செய்யப்படும்.

2009 ஜூலை 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது வேலூர் மாநகராட்சியாகி, அங்கே புகழ்பெற்ற V.I.T. பல்கலைக்கழகம், பொற்கோயில் மற்றும் C.M.C. மருத்துவமனை என்று பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அமைந்திருக்கின்ற காரணத்தினால், தினந்தோறும் இலட்சக்கணக்கான மக்கள் வேலூருக்கும், காட்பாடிக்கும் வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கக்கூடிய பாலம், பழைய பாலமாக, ஆட்டம் காணுகிற பாலமாக இருக்கிற காரணத்தினால், 16 கோடி ரூபாய் செலவில் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கின்ற பாலமும் போதாது என்கிற காரணத்தினாலும்தான் நான் அந்தக் கருத்தை வலியுறுத்தினேன்.

ஏற்கெனவே, காங்கேயநல்லூரிலிருந்து சத்துவாச்சாரிக்கு இன்னொரு பாலம் அமைப்பதற்கான முன்மொழிவுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அதை ஆராய்ந்து, இந்த ஆண்டே நபார்டு வங்கியிலிருந்தோ அல்லது வேறுவகையிலேயோ பணத்தைப் பெற்று, பணியைத் தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுகுறித்து ஏற்கெனவே குறிப்பிட்டேன். அந்த பழைய பாலமானது 1975 ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட பாலமாகும். அது ஆட்டம் காணுகிறதென்று சொன்னார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் முதன்முதலாக குளித்தலை தொகுதியிலே சட்டமன்ற உறுப்பினராகப் போட்டியிட்ட நேரத்திலே, அந்தத் தொகுதி மக்களுடைய கோரிக்கையான முசிறியையும், குளித்தலையையும் இணைக்கக்கூடியவகையிலே காவிரி ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட வேண்டுமென்ற கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு அந்தப் பாலம் கட்டி முடிக்கப்பட்டது.

[2009 ஜூலை 3

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு அந்தப் பாலத்தில் பழுது ஏற்பட்டு, அது எங்களுடைய கவனத்திற்கு வந்தவுடன், நானும் துறையினுடைய செயலாளர் பொறியாளர்கள் எல்லோரும் சென்று பார்த்த நேரத்தில், வாகனங்கள் செல்லும்போது அது கடுமையாக ஆட்டம் கண்டது. அந்தப் பாலம், அன்றைய காலகட்டத்தில் சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட பாலம். அது பழுதுபார்க்கப்பட்ட நேரத்தில், அதற்கான செலவு சுமார் மூன்று கோடி ரூபாய். இங்கேகூட அதற்குரிய நிறுவனங்கள் இல்லாத காரணத்தினால், மும்பை போன்ற பகுதிகளிலிருந்து நிறுவனங்கள் அழைக்கப்பட்டு, பழுதுபார்க்கப்பட்டு, இப்பொழுது அது சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் பாலம் பழுதடைந்திருக்குமானால், நிச்சயமாக இந்த அரசும், இந்தத் துறையும் ஆய்வு செய்து, அதற்குரிய நடவடிக்கையை எடுக்கும்.

அதேபோல, சத்துவாச்சாரிக்கும் காங்கேயநல்லூருக்கும் இடையே இன்னொரு பாலம் கேட்டிருக்கிறார். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்கூட, அது தரைப் பாலமாக இருந்தால்கூடப் போதும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, அதுபற்றி நிச்சயமாகத் துறை பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர்.

திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை-கும்பகோணம் சாலை என்பது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சாலை. அந்தச் சாலையிலே என்னுடைய அரியலூர் மாவட்டத்திற்கும், தஞ்சை மாவட்டத்திற்கும், கும்பகோணத்திற்கும் இடையிலே இருக்கின்ற அணைக்கரை பாலம் தற்பொழுது பழுதடைந்த நிலையிலே உள்ளது. அது பொதுப் பணித் துறைக்கு உட்பட்ட ஒரு ஆணை என்றாலும், அதன் மேலாக வாகனப் போக்குவரத்து அனுமதிக்கப்பட்டு அது மிகுந்த பயன்பாட்டில் இருக்கின்ற சூழ்நிலையில், இன்றைக்கு அதிலே விரிசல் ஏற்பட்டு, போக்குவரத்து தடை செய்யப்பட்டிருக்கிறது. தற்போது இலகு ரக வாகனங்களான கார் போன்றவை பயன்படுத்த அனுமதிக்கப்பட்டிருந்தாலும், பஸ் சென்று வர இயலாமல் மிகுந்த இடைஞ்சலாக இருக்கிறது.

இதற்கிடையில், தேர்தலுக்கு முன்பாக அன்றைக்கு மத்திய அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. டி.ஆர். பாலு அவர்கள்

2009 ஜூலை 3]

அதில் புதிய பாலம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். எனவே, நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் அதிலே சிறப்புக் கவனம் எடுத்துக்கொண்டு, அதனை விரைந்து செயல்படுத்த முயற்சி எடுப்பார்களா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணைக்கரைப் பாலத்தைப்பற்றி நேற்றைக்குக்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கு நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய ஒரு ஷட்டருக்கு மேலேதான் அங்கு போக்குவரத்து நடைபெற்று வருகிறது. நீண்ட நாட்களான காரணத்தால், அதில் கொஞ்சம் பழுது ஏற்பட்டிருக்கிறது. எனவே, கன ரக வாகனங்கள் சென்றால், மிகப் பழுதடைந்து, வாகனப் போக்குவரத்து முழுவதுமாக நிறுத்தப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்பதால் அங்கேயே மாவட்ட நிருவாகம், பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை பொறியாளர்களெல்லாம் கலந்து பேசி, இப்பொழுது அதிலே இலகு ரக வாகனங்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்கூட நேற்றைக்குப் பதில் சொல்லியிருக்கிறார்கள்.

இன்றைக்குக்கூட நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லி, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே பேசி, பேருந்துகள் செல்வதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். மதியம் அதற்குண்டான நடவடிக்கையை நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் எடுக்கவிருக்கிறார்கள். எனவே, பேருந்துகள் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். லாரி போன்ற கன ரக வாகனங்கள் செல்வதற்கும், அதிக சுமை ஏற்றிச் செல்லக்கூடிய வாகனங்களின் போக்குவரத்திற்கும் உகந்த பாலமாக இப்பொழுது அது இல்லை.

அதேபோல, மத்திய அமைச்சராக இருந்த, மாண்புமிகு திரு. டி.ஆர். பாலு அவர்கள் அந்த இடத்திலே பாலம் கட்டுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று சொல்லி செய்தி வந்ததென்று சொன்னார். வரக்கூடிய நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கையில் அதுபற்றி விளக்கமாகத் தெரிவிக்கிறேன்.

[2009 ஜூலை 3

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் செல்வி ஆ. அங்கையற்கண்ணி.*

செல்வி ஆ. அங்கையற்கண்ணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சங்கராபுரம் தொகுதிக்குட்பட்ட அரசம்பட்டு வழியாக பாவானம் செல்லும் பாலம் 1989 ஆம் ஆண்டு நம்முடைய கழக அரசால் டெண்டர் விடப்பட்டு வேலை நடந்து பாதியில் நின்றுவிட்டது. அதனை மீண்டும் புதுப்பித்துத் தர நம்முடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி லதா அதியமான்.*

திருமதி லதா அதியமான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் தொகுதி, கிருஷ்ணாபுரம் மற்றும் எஸ்.பி. நத்தத்திற்கிடையில் கமண்டல நதி மற்றும் வரத்துக் கால்வாயைக் கடப்பதற்கு தரைமட்டப் பாலங்கள் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறையினுடைய பராமரிப்பில் இருக்கக்கூடிய சாலைகளில் பெரும் அளவில் பாலங்கள் இல்லாத பகுதியில்லை என்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதி அநேகமாக ஊராட்சி ஒன்றியச் சாலையாக இருக்கும். எனவே, அதுகுறித்து நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடுகள்)*

2009 ஜூலை 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி, உங்களை எச்சரிக்கிறேன். பின்னாலிருந்து சத்தம் வந்துகொண்டேயிருக்கிறது. மூன்று, நான்கு முறையாகச் சொல்லிக்கொண்டிருக்கின்றேன். (குறுக்கீடுகள்) உங்களை எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கட்டாயமில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி. (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.

திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு - பள்ளிப்பாளையம் காவிரி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் வேண்டுமென்று தங்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை ஏற்கெனவே கேட்டேன். துணை மின் நிலைய தடுப்பணை சாலை அமைக்கப்படுகின்ற காரணத்தினாலும், அதேபோல கொக்கராயன்பேட்டையில் புதிய பாலம் அமைக்கப்படவிருக்கிறது என்பதாலும் அங்கு இருக்கின்ற பாலமே போதுமானதாக இருக்கிறது; எனவே, அங்கு தேவையில்லையென்று சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலேதான் போக்குவரத்து அதிகமாக இருக்கின்றது. பேருந்துகள் செல்கின்ற பாலமாகவும் இருக்கின்றது. எனவே, புதிய பாலம் நிச்சயமாகத் தேவையாக இருக்கின்றது. ஏதாவது விபத்து ஏற்பட்டுவிட்டால் அங்கு போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுவிடுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அதுகுறித்து நன்றாகத் தெரியும். ஆகவே, உடனடியாக அங்கு புதிய கூடுதல் பாலம் கட்டித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு உரிய பதில் தரப்பட்டிருக்கிறது. இப்போது ஈரோடு பகுதியையும், பள்ளிப்பாளையம் பகுதியையும் இணைக்கக்கூடிய வகையிலே பள்ளிப்பாளையத்தில் ஏற்கெனவே காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம் நல்லமுறையில் பயன்பாட்டில் உள்ளது. அதற்கு மேல் பகுதியிலே உள்ள அக்ரஹாரம் பகுதியிலே, மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக தடுப்பணை கட்டப்பட்டு அதிலும் ஓரளவிற்குப் போக்குவரத்து நடைபெற்று வருகிறது. ஏற்கெனவே இருக்கக்கூடிய பழைய பாலத்தின்கீழே விண்டிபாளையம் என்ற பகுதியில் ஈரோடு மாவட்டத்தையும்

[2009 ஜூலை 3

நாமக்கல் மாவட்டத்தையும் இணைக்கின்றவகையிலே ஒரு தடுப்பணை கட்டப்பட்டு வருகிறது. அதையும் போக்குவரத்துப் பயன்பாட்டிற்கு ஏற்றவகையில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலான அரசு வந்த பிறகு, ஈரோட்டில் சுற்றுச்சாலை வேண்டுமென்று கேட்ட காரணத்தால் அங்கே போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக அதற்கும் அனுமதி வழங்கப்பட்டது. சுற்றுச்சாலையோடு சேர்த்து காவிரி ஆற்றிலே, ஈரோடு மாவட்டத்தையும், நாமக்கல் மாவட்டத்தையும் இணைக்கக்கூடிய கொக்கராயன்பேட்டை பாலம் என்கிற பாலம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனவே, இவையெல்லாம் கட்டி முடிக்கப்பட்டாலே அங்கே நிச்சயமாகப் போக்குவரத்து நெரிசல் தவிர்க்கப்படும். மேலும் தேவைப்படுமானால், அதுகுறித்து எதிர்காலத்தில் அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை செல்லூர் இரயில்வே மேம்பாலப்பணி தற்போது எந்த நிலையில் உள்ளது? பணி எப்போது நிறைவுபெறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மதுரை செல்லூர் பாலம் எந்த நிலையில் உள்ளது என்று கேட்டிருக்கிறார்கள். என்ன நிலைமையில் இருந்தது; இப்போது என்ன நிலைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் நன்கு அறிவார். கடந்த வாரம்கூட மத்திய அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள நம்முடைய மாண்புமிகு இரசாயனத் துறை அமைச்சர் அண்ணன் அழகிரி அவர்கள் அங்கு சென்று அதனைப் பார்த்து விரைந்து முடிக்க அறிவுரை வழங்கியுள்ள செய்தி பத்திரிகையில் வந்திருக்கிறது. நிலம்கூட கையகப்படுத்தப்படாமல் இருந்தது. இந்த அரசு வந்தபிறகு நின்றிருந்த அந்தப் பணிக்காக நிலம் கையகப்படுத்தப்பட்டு, மறு ஒப்பந்தப்புள்ளி கோரி அந்தப் பணி விரைந்து நடந்து வருகிறது. மதுரை நகரத்திலேயே மூன்று

2009 ஜுலை 3]

இரயில்வே பாலப் பணிகள் நின்றிருந்தன. ஒன்று கூடல் நகர், இன்னொன்று எல்லீஸ் நகர். மற்றொன்று செல்லூர் பாலமாகும். இவையெல்லாம் கட்டி முடிக்கப்பட்டு போக்குவரத்திற்குத் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. எல்லீஸ் நகர் பாலம் மற்றும் கூடல் நகர் பாலத்தையும் நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் நேரில் வந்து திறந்து வைத்தார்கள். இந்தப் பணியும் விரைந்து முடிக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை விரைவில் நிறைவேறும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பண்ருட்டி சட்டமன்றத் தொகுதியில் இரயில்வே மேம்பாலத்திற்கு மண் பரிசோதனை செய்ய நெடுஞ்சாலைத் துறையின் சார்பாக மண் எடுத்துச் சென்றார்கள். ஆனால், இதுவரையில் அந்த மேம்பாலம் கட்டப்படவில்லை. அதேபோல குள்ளஞ்சாவடியிலிருந்து காட்டுக்கூடலூர் வரை சாலையை மேம்படுத்தி அகலப்படுத்துகின்ற பணி நடைபெற்றது. இடையில் சில கிலோ மீட்டர் தூரத்திற்கு அந்தப் பணி நடைபெறாமல் இருக்கிறது. அங்கு உடனடியாக பாலம் கட்டுவதற்கும் அந்தப் பணியினை முடிப்பதற்கும் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டியில் இரயில்வே மேம்பாலம் ஒன்று அமைப்பது குறித்து அரசாணை வழங்கப்பட்டது. மத்திய தொடர் வண்டித் துறையின்மூலமாக ஒப்புதல் பெற்று, சம பங்கு செலவீட்டிலே அந்தப் பாலம் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, அரசாணை வழங்கப்பட்டது. அதற்குள் அந்தச் சாலை, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தினுடைய கட்டுப்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதை மாநில அரசு செய்வதா

அல்லது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மூலமாகச் செய்வதா என்பது குறித்து பரிசீலிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அந்த சாலை இருவழிச் சாலையாக இருக்கின்றது. அது எதிர்காலத்திலே இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தினால் அகலப்படுத்தப்பட்டால் மீண்டும் ஒரு பாலம் அமைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். எனவே, அதுகுறித்து இந்தத் துறையின் மானியக் கோரிக்கை முடிந்தவுடன், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தினுடைய அலுவலர்களிடத்திலே பேசி அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். இன்னொரு சாலை பற்றிச் சொல்லியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சொந்த ஊருக்குச் செல்லக்கூடிய சாலை என்று கருதுகிறேன். அது ஒரு வழித் தடமாக இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, படிப்படியாக, அது இடைவழித் தடமாக மாற்றப்பட்டு வருகிறது. இன்னும் 5, 6 கிலோ மீட்டர்தான் பாக்கியிருக்கிறது. இந்த நிதியாண்டில் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண்கள் 88, 89, மற்றும் 90 பிறிதொரு நாள் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்

சென்னை, மூன்றாவது இருப்புப் பாதை அமைக்கும் பணியால் பாதிக்கப்பட்டோருக்கு மாற்று இடவசதி அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்,

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட சென்னை பகுதியில் வட்ட எண் 13, போஜராஜன் நகரை ஒட்டிய பகுதியில், பல ஆண்டுகாலமாக வசித்து வருகின்ற ஆதி திராவிட மக்களைத் திடீரென்று அப்புறப்படுத்துகின்ற ஒரு முயற்சியை இரயில்வே நிருவாகம் எடுத்திருக்கின்றது. இதுகுறித்து, 24-8-2006 அன்று, சட்டமன்றத்திலே ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து, நான் உரையாற்றுகின்றபொழுது, மாண்புமிகு முதலமைச்சர்